ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1769/4 - 2012 ජූලි මස 30 වැනි සඳුදා - 2012.07.30

*1769/4 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு விடயம் தொடர்பான அமைச்சர் பிரசண்ண ரணதுங்க ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மேல் மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்), சட்டத்தின் 2 வது பிரிவுடன் சொல்லப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 184வது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மேல் மாகாண சபையின் பிரதேச சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு செயற்குழு கூட்டத்திற்கு சமுகமளித்ததற்கான கொடுப்பனவு தொடர்பாக சட்டவிதி இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

இந்த விதி மேல் மாகாணத்தின் மாகாண சபை அனுமதியளித்து, அந்த அனுமதி தொடர்பான அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியாகும்.

பிரசண்ண ரணதுங்க,<br>
மேல்மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல்,<br>
சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,<br>
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும்<br>
பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்.<br>
மேல் மாகாணம்.

மேல் மாகாண முதலமைச்சு,<br>
"சிராவஸ்தி மந்திரய",<br>
கொழும்பு 7,<br>
2012, யூலை 20.

**விதி**

1. இவ்விதி பிரதேச சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்கள் குறிப்பிட்ட செயற்குழு கூட்டத்திற்கு சமுகமளித்தல் கொடுப்பனவு சம்பந்தமான விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. பிரதேச சபை தலைவர், உப தலைவர் அல்லது சபை அங்கத்தவர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 12 வது பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட செயற்குழு உறுப்பினராகும் சந்தர்ப்பத்தில் அந்தச் செயற்குழு கூடுகின்ற எல்லா தினத்திலும் சமுகமளித்தல் தொடர்பாக 500 ரூபா படி கொடுப்பனவு பிரதேச சபை பொது நிதியிலிருந்து வழங்க முடியும்.

3. ஒரு பிரதேச சபையின் தலைவர் அல்லாத விடத்து எவரேனும் ஒரு உறுப்பினர் நியமிக்கப்படுகையில் எந்த ஒரு நிர்வாக சபையொன்றில் ஒரு தவணைக்கு மேல் கூடிய எண்ணிக்கை கொண்ட அங்கத்துவத்தைப் பெற முன்னர் சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு நிர்வாக சபையிலாவது அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இந்தக் கட்டளையின் கீழ் கொடுப்பனவைப்பெற முடியுமான ஆகக்கூடிய நிர்வாக சபையின் எண்ணிக்கை ஒரு மாதத்தில் நிர்வாக சபை நான்கு தவணைகள் இருத்தல் வேண்டும்.

8-471/1

---

## மேல் மாகாண மாகாண சபை

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி , திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு விடயம் தொடர்பான அமைச்சர் பிரசண்ண ரணதுங்க ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மேல் மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்), சட்டத்தின் 2 வது பிரிவுடன் சொல்லப்படவேண்டிய 255 வது அத்தியாயமாகிய நகரசபை கட்டளைச் சட்டத்தில் 193(1)(உ உ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மேல் மாகாண சபையின் நகர சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு செயற்குழு கூட்டத்திற்கு சமுகமளித்தல் கொடுப்பனவு தொடர்பாக சட்டவிதி இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

இந்த விதி மேல் மாகாணத்தின் மாகாண சபை அனுமதியளித்து, அந்த அனுமதி தொடர்பான அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியாகும்.

பிரசண்ண ரணதுங்க,
மேல்மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும்
பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்.
மேல் மாகாணம்.

மேல் மாகாண முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2012, யூலை 20.

**விதி**

1. இவ்விதி நகர சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்கள் குறிப்பிட்ட செயற்குழு கூட்டத்தில் சமுகமளித்தல் கொடுப்பனவு சம்பந்தமான விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. நகர சபை தலைவர், உப தலைவர் அல்லது சபை அங்கத்தவர்களுக்கு நகரசபை கட்டளைச் சட்டத்தின்கீழ் 255 ஆம் அத்தியாயமாகிய 29 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட செயற்குழு உறுப்பினராகும் சந்தர்ப்பத்தில் அந்த செயற்குழு கூடுகின்ற எல்லா தினத்திலும் சமுகமளித்தல் தொடர்பாக 500 ரூபா படி கொடுப்பனவு நகர சபை பொது நிதியிலிருந்து வழங்க முடியும்.

3. ஒரு நகர சபையின் தலைவர் அல்லாத விடத்து எவரேனும் ஒரு உறுப்பினர் நியமிக்கப்படுகையில் எந்த ஒரு நிர்வாக சபையொன்றில் ஒரு தவணைக்கு மேல் கூடிய எண்ணிக்கை கொண்ட அங்கத்துவத்தைப் பெற முன்னர் சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு நிர்வாக சபையிலாவது அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இந்தக் கட்டளையின் கீழ் கொடுப்பனவைப்பெற முடியுமான ஆகக்கூடிய நிலையான குழுக்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தில் நிலையான குழுக்கள் நான்கு தவணைகள் இருத்தல் வேண்டும்.

8-471/2

## மேல் மாகாண மாகாண சபை

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு விடயம் தொடர்பான அமைச்சர் பிரசண்ண ரணதுங்க ஆகிய என்னால் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மேல் மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்), சட்டத்தில் 2 வது பிரிவுடன் சொல்லப்படவேண்டிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 289 வது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பிரகாரம் மேல் மாகாண சபையின் மாநகர சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு நிலையான குழுவுக்கு சமுகமளித்தல் கொடுப்பனவு தொடர்பாக சட்டவிதி இத்தால் பிறப்பிக்கப்படுகின்றது.

இந்த விதி மேல் மாகாணத்தின் மாகாண சபை அனுமதியளித்து, அந்த அனுமதி தொடர்பான அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செல்லுபடியாகும்.

பிரசண்ண ரணதுங்க,
மேல்மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம்,
மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும்
பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்.
மேல் மாகாணம்.

மேல் மாகாண முதலமைச்சு,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2012, யூலை 20.

### கட்டளை

1. இந்தக் கட்டளை மாநகர சபை தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்கள் சார்பாக நிலையான குழுவுக்கு சமுகமளித்தல் கொடுப்பனவு சம்பந்தமான கட்டளை என்று அறிமுகப்படுத்தப்படும்.

2. மாநகர சபை தலைவர், உப தலைவர் அல்லது சபை உறுப்பினர்களுக்கு 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 26 வது பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிலையான செயற்குழுவுக்கு உறுப்பினர் ஆகும் சந்தர்ப்பத்தில் அந்த நிலையான குழு கூடுகின்ற எல்லா தினங்களுக்கும் சம்பந்தமாகவும் சமுகமளிப்பது தொடர்பாக ஒரு கூட்டத்திற்கு 500 ரூபா படி கொடுப்பனவு மாநகர சபை பொது நிதியிலிருந்து வழங்க முடியும்.

3. ஒரு மாநகர சபையின் நகர முதல்வர் அல்லாத விடத்து எவரேனும் ஒரு உறுப்பினர் நியமிக்கப்படுகையில் எந்த ஒரு நிலையான குழுவொன்றில் ஒரு தவணைக்கு மேலான எண்ணிக்கை கொண்ட அங்கத்துவத்தைப் பெற முன்னர், சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஒரு குழுவிலாவது அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இந்தக் கட்டளையின் கீழ் கொடுப்பனவைப்பெற முடியுமான, ஆகக்கூடிய நிலையான குழுக்களின் எண்ணிக்கை ஒரு மாதத்தில் நிலையான குழுக்கள் நான்கு தவணைகளில் இருத்தல் வேண்டும்.

8-471/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.